90

பார்வதியின் தவம்

பர்வத ராஜனான ஹிமவானுக்குக் கூட ஒரு குறைவும் இல்லை யென்று சொல்ல முடியவில்லை. பூமிக்கே ஓர் அளவுகோல்; அவ்வளவு விஸ்தாரமாக இந்தியாவின் வடக்கு எல்லையில் அரசுபுரிந்தான். மகா நதிகளான கங்கையும் சிந்துவும் அவனுடைய பனிமுடியிலிருந்து பிறந்து பெருகிக் கிழக்கேயும் தெற்கேயும் பாய்ந்தன. சப்த லோகங்களும் அவனுடைய பிரதேசத்தில் உற்பத்தியாயின. சப்த மேகங்களும் அவன் காலடியில் படிந்து பணி செய்தன. குபேரன் அளகாபுரியை அவன் நாட்டில்தான் அமைத்துக் கொண்டான். சொர்க்க லோகத்திலிருந்து தேவதைகள் பூமிக்கு வருவதற்கு ஆசைகொண்ட போதெல்லாம் ஹிமவானுடைய ராஜ்யத்தில்தான் தங்குவது வழக்கம். தவம் புரியும் முனிவரர்கள் அவன் சாரலில் தான் ஆசிரமங்கள் அமைத்துக் கொண்டார்கள். பரமசிவங்கூடத் தம் தவத்திற்காக அவனுடைய சிகரமான கைலாசத்தில் வாசம் செய்தார்.

ஆனால் அவனுக்கு மக்கட் பேறு இல்லாதது பெருங்குறையாக இருந்தது. அவனுடைய மனைவி மேனை எத்துணையோ விரதங்களும் பூஜைகளும் செய்தாள். ஹிமவானும் தவங்கிடந்தான். கடைசியாக ஹிமாலயத்தில் இளவேனிற்காலம் வந்தது. மானஸம் முதலிய தடாகங் களில் தாமரைகள் மலர ஆரம்பித்தன. ராஜ அன்னங்கள் பேடைகளுடன் அங்கே வந்து சேர்ந்தன. ஒரு நாள் ஹிமவானும் மேனையும் புதிதாக வந்த அந்தப் பருவத்து மகிழ்ச்சியில் தாமரையின் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு குழந்தையைக் கண்டார்கள்.

அவள்தான் பார்வதி. பிரகிருதிசக்தி பெண் குழந்தையாக அவர் களுடைய கண்களில் தோன்றினாள். மேனை உடனே அந்தக் குழந்தை யைக் கையில் எடுத்துக் களிப்புற்றாள்.

அது முதல் இமயமலைச் சாரலில் ஒவ்வொரு வருஷமும் வசந்த காலம் வந்து இயற்கை, அழகான பார்வதிக்கு ஆண்டு நிறைவு நடத்தும். பூவும் பழமும் வாரி இறைத்துப் பட்சிகளைப் பாடச் சொல்லும். எங்கே

1943

பார்த்தாலும் பச்சைப்புல்லை விரித்துப் பவழக் கோலம் போடும். அந்த வசந்த மாத உற்சவத்தின் நடுவில் பார்வதி, ஆபரணத்தின் நடுவி லிருக்கும் மரகதம்போல ஜொலிப்பாள்.

மாதம் ஒரு முறை பூர்ணசந்திரன் வந்து நிலவைப் பொழிந்து அவளை அதில் மெல்ல நடக்க விடுவான். அந்த இன்ப ஒளியில் அவளுடைய அங்கங்கள் மேனி கொள்ளும். நட்சத்திரங்கள் அவள் தலைமயிரில் பூக்கள் போலப் பொலியும். இரவுகளில் சந்தனமரங்களிலிருந்து காற்றுப் புறப்பட்டு வந்து அவளுக்கு வாசனை வீசும். மேகங்களிலிருந்து மின்னலை எடுத்து அவளுக்கு ஆபரணங்கள் செய்து அணிந்திருந்தாள் மோனை.

தினமும் அவள் தன் அறையிலிருந்து உஷையைப் போல வெளியே வருவாள். திக்குகள் எல்லாம் அவள் ஒளி பட்டுச் சிவக்கும். அவள் காலடி எடுத்து வைக்கும்போது ஒரு தடவை பூமி சிலிர்த்துப் பூமகிழ்ச்சி கொள்வாள். அவள் தோழிகளுடன் பேசும் குரலைக் கேட்டுப் பட்சிகள் பாடம் செய்யும். மான்கள் வந்து அவள் விழிகளிலிருந்து மருட்சியைக் கற்றுக்கொள்ளும்.

தினமும், மாதமும், வருஷமும் அளித்த இந்தத் தித்திப்பு, பர்வத குமாரிக்கு ஏனோ பிடிக்கவில்லை. அதில் தென்பட்ட மகிழ்ச்சி அவளுக்கு அதிகமாக இருந்தது. அந்த இன்பச்சாரலை விட்டு நீங்கிப் பர்வத சிகரத்தின் பனித் தனிமைக்குப் போனாள்.

அங்கு ஒன்றுமே இல்லை. எங்கே பார்த்தாலும் பர்வதமும் பனியுமே தோன்றின. அவற்றின் நடுவில் கைலாய சிகரத்தின் உயர்வில் சிவபிரான் தவம் செய்த வண்ணம் உட்கார்ந்திருந்ததைக் கண்டாள். அவருடைய தலையின் சடைகளிலிருந்து கங்கை, சிறு நீர் வீழ்ச்சிகளாகப் பெருகிக் கொண்டிருந்தாள். அவர் தலையில் பிறை படிந்திருந்தது. கண்களை மூடிக்கொண்டு உணர்ச்சியற்றவர்போல் இருந்தார் அவர்.

அவர் எதைக் குறித்து தவம் செய்துகொண்டிருந்தார்? சுற்றியிருந்த பனியின் தூய்மையையும் தூக்கியடித்துக்கொண்டு ஒளி வீசியது, அவருடைய தேககாந்தி. தம் வல்லமையை ஏற்கும் தன்மை வாய்ந்த ஒரு சக்தியை வேண்டித் தவம் செய்தாரோ?

பார்வதி அந்தக் காட்சியைக் கண்டு காதல் கொண்டாள். அங்கேயே வசித்து அந்தத் தவ வடிவத்தின் பணியிலேயே ஈடுபட வேண்டுமென்று தீர்மானித்தாள். அவளும் அந்தச் சேவைத் தவத்தில் இறங்கினாள்.

அந்த வருஷம், வசந்த காலம் பார்வதியைத் தேடிக்கொண்டு கைலாசத்திற்கே வந்துவிட்டது. எங்கும் வர்ணமும் வாசனையும் நாதமும் நிறைந்தன. பனிகூடப் பிரிந்து காற்றில் தென்றலின் இன்ப ஸ்பரிசம் தோன்றலாயிற்று.

பார்வதி அந்த வசந்த காலத்தையே சிவபிரானுக்கு நிவேதனம்

செய்தாள்.

மாசி மாதத்தில் ஐந்தாம் பிறையன்று பார்வதி மாகபூர்ணிமா விரதத்தை ஆரம்பித்தாள். அது பத்து நாள் விரதம். ஒவ்வொரு நாளும் உஷைக்காலத்தில் பனி நீராடி, ஒளியுடுத்து, ஈரக் கூந்தலில் தூய அறுகம் புல்லை அணிந்து பார்வதி, தனது ஜோதி உடலிலிருந்து ஜ்வாலை வீசச் சிவார்ச்சனை செய்தாள். ஆயிரத்தெட்டு வகையில் அவர் குணங்களை வர்ணித்துப் புகழ் பாடினாள்.

பூர்ணிமையன்று இரவு, நிலவு பட்டப்பகல் போல ஒளி வீசிக் கொண்டிருந்தது. கங்கையின் நீர் வீழ்ச்சி அந்த ஒளியில் துள்ளி விளையாடிற்று. பார்வதி அந்த நிலவிலிருந்து உதித்த ஒளிஉருவம்போல, சிவ சந்நிதியில் விரத கன்னிகையாக நின்றுகொண்டிருந்தாள். அவள் உடுத்திருந்த மரவுரிகளின் இடைவெளிகளிலிருந்து அவள் அங்கங்கள் விறகுகளின் இடைவெளிகளில் தென்படும் நெருப்புத் துணுக்குகள் போல் பிரகாசித்தன.

பார்வதியின் அழகே மெய்ம்மறந்தது. எதிரே தவத்திலிருந்த உண்மை, விசுவரூபம் கொண்டது. சிவபெருமானுடைய சடைகள் மேக மண்டலங்களாயின;சந்திரன் அதில் பதிந்திருந்தான். கங்கையின் தாரை அந்த மேகங்கள் விடுத்த மழைபோல் கொட்டியது. கீழே பிரகிருதியும் பிரகிருதியின் மூலவிக்கிரகமான பார்வதியும் அந்தப் பெரு மழையில் உயிர் பெற்று நின்றார்கள்; திளைத்தார்கள்.

சிவபிரான் கண்கள் திறந்தன. தவம் கலைந்தது. பார்வதியைப் பார்த்ததும் அவருடைய உதடுகளில் ஒரு புன்முறுவல் தோன்றியது, மறையுமுன் தென்படும் மின்னல்போல. பார்வதியின் பாவையன்ன அழகு அவர் பார்வையைக் கவர்ந்தது. சேதனம் இன்றி இருந்த பிரம்மம் திடீரென்று சேதனம் அடைந்தது.

மறு கணம் அவருடைய கண்கள் சிவந்தன. சுற்று முற்றும் பார்த்தார். சிறிது தூரத்தில் மன்மதன் கரும்பு வில்லும் கையுமாகக் கிளி வாகனத்தின் மேல் ரதியுடன் அமர்ந்து மலர் அம்புகளைத் தொடுத்துக் கொண்டிருந்தான்.

சிவபிரான் மூன்றாம் கண்ணைத் திறந்தார். அதே கணம் மனமதன் காலாக்கினியில் பட்டு எரிந்து சாம்பலானான். பார்வதி நடுநடுங்கி நின்றாள்.

ஆனால் சிவபெருமான் கோபம் பயன்படவில்லை. காரியம் நடந்து விட்டது. பார்வதியை நோக்கிக் கைகளை நீட்டினார். மெய்ம்மறந்த மகிழ்ச்சியுடன் பார்வதி சிவபிரான் மார்பில் சாய்ந்தாள்.

மலைச் சாரலில், மரநிழலில், மடுக்கரையில் எங்கும் திடீரென்று ஆண்குரல் பெண்ணை அழைத்தது.

•